பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆனி 19 (2—7—68) செவ்வாய் ★ வெளியூர்: ஆனி 20 (3—7—68) புதன் [இதழ்: 15

பட்ட பின் புரிகிறது!

திட்டக் குழுவின் காலங்கடந்த 'ஞானோதயம்'!

புதுடில்லி, ஜூலை 2—

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை அனுகும்விதம் தொடர்பாக வெளியிடப்பட்ட திட்டக் குழுவின் அறிக்கை பற்றி ஆலோசனை தெரிவிக்குமாறு பல்கலைக்

(4-ம் பக்கம் பார்க்க)

சட்ட--அமைதிக் காவலர் எங்கே?

வறட்டுக் கூச்சலிடுவோரே--வடக்கே நடந்திருப்பதைப் பாரீர்!

காங்கிரசாட்சியில் காவல் துறையினரின் முறைகேடான செயலால் கலவரம்--துப்பாக்கிச் சூடு!

குடியரசுத் தலைவர் ஆட்சியில் பட்டப் பகலில் கொலை--கொள்ளை!

தமிழகத்தில் சட்டம்--அமைதி குலைந்துவிட்டதாக வறட்டுக் கூச்சலிடும் இங்குள்ள காங்கிரசுக்காரர்கட்குப் பக்கமேளம் வாசிப்பதுபோல், மத்திய அரசின் துணைத் தலைமைச்சர் மொரார்ஜி தேசாயும், இராசபாளையத்தில், 'ஆமாம், ஆமாம்; தமிழகத்தில் சட்டம்--ஒழுங்கு குலைந்துதான் கிடக்கிறது' என்றும், 'தி. மு. கழக ஆட்சி இங்கு நிலைக்காது' என்ற கருத்துப்படவும் கூறிவிட்டுச் சென்றாரல்லவா?

தமிழகத்தில் சட்டம்--அமைதி காப்பதில் தனி அக்கறை காட்டும் அந்த மாமேதைக்கு, தலைநகரான டெல்லிப் பட்டணத்திலேயே சட்டம்--அமைதி குலைவு அன்றாட நிகழ்ச்சிகளாக இருந்துவருவதை அறிந்துகொள்ள நேரமில்லை! பற்றாக்குறைக்கு, காங்கிரசு ஆளும் மாநிலங்களிலும், குடியரசுத் தலைவர் ஆட்சி நடக்கும் மாநிலங்களிலும், சட்டம்--அமைதி எந்த அளவுக்குக் காக்கப்பட்டு வருகிறது என்பதும் அவருக்குப் புரிவதில்லை.

கழக ஆட்சி நிலவும் தமிழகத்தைப் பற்றித்தான் அவருக்கும், அவர் சார்ந்துள்ள காங்கிரசுக் கட்சிக்கும் தனிக் கவலை!

எனவேதான், இங்கு சில நிகழ்ச்சிகளை அவருடைய கவனத்துக்கு வைக்கிறோம்; இந்த நிகழ்ச்சிகளெல்லாம், சட்டம்--அமைதிக்கு உட்பட்டவைதாமா என்பதை இங்குள்ள காங்கிரசுக்காரர்களைக் கேட்டுப் பொதுமக்கள் தெரிந்து கொள்வார்களாக!

டில்லி வட்டாரத்தில் கொள்ளையர் அட்டகாசம்

புதுடில்லி, ஜூலை 2—

கடந்த சனிக்கிழமையன்று டில்லியின் இரண்டு புறநகர்ப் பகுதிகளில் ஆயுதம் தாங்கிய கொள்ளையர்கள் வீடுகளில் புகுந்து அப்பாவி மக்களை மிரட்டி ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள்.

கொள்ளையரின் மிருகத் தாக்குதலுக்கு உள்ளான மூன்று பெண்கள் உட்பட 10-பேர் காயமுற்றனர்.

கட்டைகளையும் கத்திகளையும் ஏந்தி வந்த கொள்ளையர்கள், குதாப் என்ற இடத்திற்கு அருகிலுள்ள தொழிலாளர் 'காலனி'யில் புகுந்து 12-குடிசை வீடுகளில் கொள்ளையடித்தனர். அவர்களை எதிர்த்த மக்களைத் தடிகொண்டு அடித்து நொறுக்கினர். கிடைத்த நகைகளையும், மற்ற பொருள்களையும் களவாடிக்கொண்டு ஓடிவிட்டனர்.

இச்சம்பவத்துக்குப் பிறகு மற்றொரு குடியிருப்புப் பகுதியில் கொள்ளையர்கள் புகுந்து ஒரு பெண்ணிடம் தங்க நகையைப் பறித்துக்கொண்டார்கள். கொள்ளையரைப் பிடிக்க முயன்ற அண்டை வீட்டுக்காரரைத் தடியால் அடித்துப் போட்டனர்.

இதுபற்றிப் போலீசில் புகார் செய்யப்பட்டது. இதுவரை 60 பேரைப் போலீசார் விசாரணை செய்தனர்; ஆனால் யாரும் கைதாகவில்லை.

பட்டப்பகலில் பயங்கரக் கொள்ளை

கல்கத்தா, ஜூலை 2—

ஆயுதம்தாங்கிய ஒரு கொள்ளைக் கூட்டத்தினர் நேற்று காலை 9 மணியளவில், தென் கல்கத்தாவில் பூங்கா தெரு அஞ்சல் நிலைய காம்பவுண்டுக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அஞ்சல் வண்டியின் பூட்டைச் சுத்தியலால் உடைத்தெறிந்துவிட்டு ரூ 4 இலட்சம் அடங்கிய பணப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டனர்.

தம்மைத் தடுக்க வந்த இரண்டு காவல்காரர்களைக் கொள்ளையர்கள் நாட்டுப் துப்பாக்கியால் இரண்டு தடவை சுட்டனர்; இதன் விளைவாகக் காவல்காரர் இருவரும், அஞ்சல் வண்டி மேற்பார்வையாளரும் படுகாயமுற்றனர்; அத்துடன் அந்தக் காவல்காரர்களிடமிருந்து இரண்டு துப்பாக்கிகளையும் அவர்கள் பறித்துக்கொண்டனர்.

களவாடிய பணப் பெட்டியுடன் கொள்ளையர்கள், வெளியே தயாராக நின்றிருந்த காரில் ஏறித் தப்பி ஓடி மறைந்தனர்; போகும் அவசரத்தில் அவர்களுடைய இரண்டு கைத் துப்பாக்கிகளையும் விட்டுவிட்டுப் போயினர்.

காயமுற்ற மூவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்; அவர்களுள் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

இந்தக் கொள்ளையிடும் சம்பவம், 'கண்ணை மூடித் திறப்பதற்குள் நடந்துவிட்டது' என்று சொல்லுவதைப்போல், ஐந்து நிமிடங்களில் நடந்து முடிந்துவிட்டது என்று போலீசு அதிகாரி கூறினார்.

கொள்ளையர்கள் அஞ்சல் துறை உடையுடன் காரில் வந்து இறங்கினர் என்றும், வேலை முடிந்ததும் அதே காரில் ஏறி தப்பிவிட்டனர் என்றும் அவ்வதிகாரி மேலும் கூறினர்.

மேற்கு வங்கம், குடியரசுத் தலைவரின் ஆட்சியிலுள்ளது என்பது தெரிந்ததே.

கொள்ளையர்கள் பயன்படுத்திய தாகக் கூறப்படும் கறுப்பு நிறக் கார், நகரின் ஒரு பகுதியில் கேட்பாரற்றுக் கிடந்ததைப் போலீசார் கண்டுபிடித்தனர்; அந்தக் கார் அவுரா மாவட்டத்தில் சால்கியா என்ற ஊரிலுள்ள ஒரு தொழிற்சாலையைச் சேர்ந்தது என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது; அந்தத் தொழிற்சாலையிலிருந்து சில நாட்களுக்குமுன் அந்தக் கார் களவாடப்பட்டிருக்கிறது.

போலீசுத்துறை அதிகாரி வீட்டிலேயே கொள்ளையர் கைவரிசை

லக்னோ, ஜூலை 1—

போலீசுத் துறைச் செயலாளர் வீட்டிலேயே திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியிருக்கின்றனர் — கவர்னர் ஆட்சி நடக்கும் உத்தரப் பிரதேசத்தில்!

உ. பி. மாநில உள்துறையின் (போலீசு) செயலாளர் வீட்டில் நள்ளிரவில் திருடர்கள் புகுந்து துப்பாக்கியைக் காட்டி மிரட்டி தங்க நகை — பணம் — விலை உயர்ந்த துணிமணிகள்—வெள்ளிப் பாத்திரங்கள் ஆகியவற்றைக் கொள்ளையடித்தனர்.

சில நகைப் பெட்டிகளை எடுத்துச் சென்று கவர்னர் மாளிகையின் காம்பவுண்டுக்குள்ளேயே போட்டு உடைத்தனர். நகைகளை எடுத்துக்கொண்டு காலிப் பெட்டியை அங்கேயே போட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

இந்தச் சம்பவம் மாநிலத்தில் பெரும் பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது.

மாவட்டத் தலைநகராகக் காஞ்சி

கலெக்டர் அலுவலகத்துக்கு முதலமைச்சர் அண்ணா வருகை

நீதிமன்றங்கள் செங்கற்பட்டிலேயே நீடித்திருக்கும்

மதுராந்தகம், ஜூலை 1—

செங்கற்பட்டு கலெக்டர் அலுவலகமும், மேற்கு செங்கற்பட்டு மாவட்ட போலீசு சூப்பிரண்டெண்டு அலுவலகமும் காஞ்சிபுரத்துக்கு மாற்றப்பட்டு இன்று முதல் செயல்படத் துவங்கின.

இதற்கான விழா, இன்று காஞ்சிபுரத்தில் சிறிய அளவில் நடந்தது.

முதலமைச்சர் அண்ணா அவர்கள், சென்னை செல்லும் வழியில் இன்று காஞ்சிபுரத்துக்கு வந்து கலெக்டர் அலுவலகத்தைப் பார்வையிட்டார்; கலெக்டர் கே. இலட்சுமிகாந்தன் பாரதியும், மற்ற அதிகாரிகளும் அவரை வரவேற்றனர்.

முதலமைச்சர் அண்ணா அவர்கள், செய்தியாளர்களிடை பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மாவட்டத் தலைநகரைக் காஞ்சிபுரத்துக்கு மாற்றும் பிரச்சினை, பல ஆண்டுக்காலமாகப் பரிசீலனையில் இருந்துவந்தது; எனினும், நிர்வாக நலனையொட்டி மாவட்டத் தலைநகரம் இப்போது காஞ்சிபுரத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது; எனவே, மக்களுக்கும்—கலெக்டருக்கு மிடையே உறவு இதனால் நன்கு வளரும் என்று நம்புகிறேன்.

நீதிமன்றங்கள், செங்கற்பட்டிலேயே தொடர்ந்து செயல்பட்டு வரும்; அவற்றைக் காஞ்சிபுரத்துக்கு மாற்றும் பேச்சே இல்லை.

'செங்கற்பட்டு மாவட்டம்' என்ற பெயர் தொடர்ந்து நீடிக்கும்."

நீதிமன்ற வாயிலிலேயே படுகொலை

பாட்டின்டா, ஜூலை 2—

மாவட்ட நீதிமன்ற வாயிலில் பலர் முன்னிலையில் பட்டப்பகலில் இன்று ஒரு படுகொலை நடந்தது

ஒரு கொலை வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்துக்கு வந்திருந்த 6 கிராமவாசிகள் திடீரென்று தங்கள் எதிரிகளைச் சுட்டுவிட்டனர்.

தீர்கிஸ் என்ற 22-வயது விவசாயி துப்பாக்கிக் குண்டு பாய்ந்து சாய்ந்தார். சுட்டவர் அத்துடன் திருப்தியடையாமல் இறந்தவரின் தலையையும் வெட்டித் துண்டாடினாராம்.

இறந்தவரின் தந்தையும், மாமனும் குண்டுக் காயங்களடைந்தனர்.

சுட்ட எதிரிகள் தப்பியோடாமல் அவர்களைப் போலீசார் தடுக்க முயன்றனர். அவர்களுடன் ஒன்றரை மணி நேரத் துப்பாக்கிச் சண்டைக்குப்பின் நால்வரைத்தான் பிடிக்க முடிந்தது; இருவர் தப்பியோடிவிட்டனர்.

இந்த ஆறு பேர்மீதும் இ.பி.கோ.-வின் பல பிரிவுகளின்கீழ் காவல் துறையினர் ஒரு வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

பாட்டின்டா, பஞ்சாப் மாநிலத்திலுள்ள ஒரு பகுதி.

மத்திய அமைச்சரவையில் மாறுதல்?

ஜூலை 8-ந் தேதிக்குள் அறிவிப்பு வெளியாகலாம்

குடியரசுத் தலைவருடன் இந்திரா காந்தி ஆலோசனை

புதுடில்லி, ஜூலை 1—

தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி நேற்றிரவு குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேனைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தார். தலைநகரில் நிலவும் மத்திய அமைச்சரவை மாற்றியமைக்கப்படலாம் என்ற யூகம் இதன் மூலம் வலுப்படுகிறது.

தலைமையமைச்சர், குடியரசுத் தலைவரைச் சந்தித்துப் பேசிய பின் காபினட் அமைச்சர்களான சத்திய நாராயண சின்கா, ஜெகஜீவன்ராம், சுவரண் சிங், அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா ஆகியோரைத் தனித்தனியே சந்தித்துப் பேசியது இந்த யூகத்தை மேலும் உறுதிப்படுதத்துகிறது.

டாக்டர் சென்னா ரெட்டி இராஜிநாமா செய்தது முதலே, அமைச்சரவை மாற்றியமைக்கப்படுவது பற்றிய பேச்சு அடிபட்டுக்கொண்டிருக்கிறது.

குடியரசுத் தலைவர் ஜூலை 8-ஆம் நாள் மாஸ்கோவுக்குப் பயணமாகுமுன், அமைச்சரவை மாறுதல் பற்றிய அறிவிப்பு வெளியாகக்கூடும் என்று நம்பப்படுகிறது.

தற்போதைய நிலவரப்படி, இந்திரா காந்தி பெரிய மாறுதல் எதையும் செய்ய நினைக்கவில்லை என்று தெரிகிறது; இருக்கின்ற அமைச்சர்களுக்கிடையே இலாகாக்கள் மாற்றியமைக்கப்படும் என்று தெரிகிறது.

போலீசுக்காரரின் முறைகேடான செயலால் துப்பாக்கிச் சூடு

ஐதராபாத், ஜூலை 2—

காங்கிரசு ஆளும் மாநிலமான ஆந்திரத்தின் தலைநகர் அருகில் மத்திய போலீசார் ஒருவர், பெண்ணிடம் முறைதவறி நடந்துகொண்டதன் காரணமாக ஊர்மக்கள் போலீசு முகாமை முற்றுகையிட--அதன் விளைவாக துப்பாக்கிச் சூடு நடத்தி மக்கள் கூட்டத்தைக் கலைக்க வேண்டிய அளவுக்கு நிலைமை முற்றிவிட்டது.

ஆந்திரத் தலைநகரான ஐதராபாத்துக்கு அருகில் உள்ள சந்திரயங்குத்தா என்னுமிடத்தில் மத்திய அரசின் ரிசர்வ் போலீசுப் படை முகாம் இருக்கிறது. அந்தப்படையைச் சேர்ந்த ஒருவர் ஓர் இளம்பெண்ணிடம் முறைகேடாக நடந்துகொண்டதை

(4-ம் பக்கம் பார்க்க)

புதிய சேனை—ஆனால் நல்ல சேனை

தமிழகத்தின் சீரணி---

மத்திய செய்தித் துறையின் சிறப்புக் கட்டுரை

"தமிழகத்தில் உருவாகியுள்ள சீரணிப் படை, 'மிகச் சிறப்பாகப் பணியாற்றுகிறது' என்று மாநிலத்தின் பல பகுதிகளிலுமிருந்தும் வந்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

"கருவிகளுக்கும், இயந்திரச் சாதனங்களுக்குமாக 1967—68-ம் ஆண்டில்—அதாவது, சீரணிப் படையின் முதல் ஆண்டில் அரசு ரூ. 10-இலட்சம் ஒதுக்கியது; இந்தத் தொகை முழுவதும் பயன்படுத்தப்பட்டுவிட்டது.

"சுமார் 28,000 தொண்டர்கள் கிட்டத்தட்ட ரூ. 17.50 இலட்சம் மதிப்புக்கு இலவசமாக உழைத்திருக்கிறார்கள்; ஏரிகளைப் புதுப்பித்திருக்கிறார்கள்; வண்டல் மண்ணை அகற்றியிருக்கிறார்கள்; பாசனக் கால்வாய்களை வெட்டியிருக்கிறார்கள்; தரிசு நிலங்களைச் சாகுபடிக்கு ஏற்றதாக மாற்றியிருக்கிறார்கள்"

என்று இந்திய அரசு செய்தித்துறையின் செய்தியாளர் ஒருவர், பத்திரிகைகளில் வெளியிடுவதற்கென எழுதியுள்ள சிறப்புக் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தின் சீரணியின் சிறந்த பணிகளைப் பாராட்டும்வகையில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

நாட்டில் வகுப்புவாத அடிப்படையிலும், இன—மொழி வேற்றுமைகளை வளர்க்கும்வகையிலும் தீய சக்திகளாகத் தோன்றியுள்ள 'சேனை'களைப் போலல்லாது, நாட்டுக்கு நல்லது செய்யும் 'சேனை'யாக இந்தச் சீரணி இயங்கிவருவதை அவர் கட்டுரை சுட்டிக்காட்டுகிறது. அந்தக் கட்டுரை வருமாறு:—

ஒத்திக்காடு கால்வாய்த் திட்டத்தையும், அதே தொகுதியில் இதுபோன்ற மேலும் இரண்டு திட்டங்களையும் மக்கள் தாங்களே முன்வந்து செய்து முடித்திருக்கிறார்கள்.

விளை பொருள் உற்பத்திக்குத்தான் இந்தத் திட்டத்தில் முதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றாலும், கிராமங்களில் மற்ற வசதிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள்.

இதே தொகுதியில் உள்ள பெரத்தூர் கிராமத்தில் ஒரு தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பில் 2,000 அடி நீளத்திற்குச் சாலைகள் அமைத்திருக்கிறார்கள்; கழிவு நீர்க் கால்வாய்களையும் அமைத்திருக்கிறார்கள்.

பக்கத்தில் உள்ள சோழவரம் தொகுதியில் கிராமவாசிகள் தங்கள் குழந்தைகளுக்காகப் புதிய பள்ளிக்கூடக்கட்டிடங்கள் கட்டுவதற்கான தீவிரத் திட்டம் ஒன்றில் கவனம் செலுத்திவருகிறார்கள். இந்தத் தொகுதியில் இததகைய 23 புதிய கட்டிடங்களை நானே நேரில் பார்த்தேன். இவற்றுக்கான பொருள்களை அரசு வழங்கிற்று—உழைப்பை மக்கள் வழங்கினர்!

சாகுபடியாளர்களுக்கு முற்போக்குச் சிந்தனையும், உழைக்கும் மனப்போக்கும் இருந்தால் எந்த அளவுக்கு மாறுதல் ஏற்படுத்த முடியும் என்பதற்கு இந்தப் பகுதி ஓர் எடுத்துக்காட்டாகும்.

மழை இல்லை என்பது உண்மை; ஆனால், பம்பு செட்டுகளினால் பாசன வசதி ஏற்படுத்தி, மழையின்மையினால் ஏற்படும் இடர்ப்பாடுகளைத் தீர்த்துவிட்டார்கள்.

இந்தப் பகுதியில் மின்சார வசதி இல்லாத ஒரு கிராமம்கூடக் கிடையாது.

இந்தப் பகுதியில் சாகுபடிக்கு உகந்த நெல் வகைகளைத் தேர்ந்தெடுத்து வழங்கியிருக்கிறது—பக்கத்திலுள்ள தீரூர்குப்பம் அரிசி ஆராய்ச்சி நிலையம்.

அரசாங்க விதைப் பண்ணை ஒன்று நல்ல தரமான விதைகளை வழங்குகிறது. சோளத்தையும், கரும்பையும் இப்போது புதிதாகச் சாகுபடி செய்யத் துவங்கியிருக்கிறார்கள்.

விளை பொருள் உற்பத்திப் பெருக்கத்துக்கு வேண்டிய வசதிகளை கிராமவாசிகளுக்கு வழங்குவதற்காகப் பஞ்சாயத்து நிறுவனங்கள் தங்கள் வசமுள்ள நிதியை முழுமையாகப் பயன்படுத்தும் பொருட்டு இந்த ஆண்டு மாநிலமெங்கிலும் நிறைவேற்றப்படும் ஓராண்டுத் திட்டத்தை இந்தத் தொகுதியும் நிறைவேற்றி வருகிறது. விவசாயிகளுக்கு வாடகைக்குக் கொடுப்பதற்காக டிராக்டர்களையும், மற்ற கருவிகளையும் வாங்குகிறார்கள். பம்பு செட்டுகளை அமைக்கிறார்கள்.

சீரணியின் அலுவல்களை திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் புகழ்ந்து உரைத்திருக்கிறார்;—'இந்த முயற்சிக்குக் காந்தியடிகள் முழுமனத்துடன் ஆசி கூறியிருப்பார்; நாட்டின் வருங்காலமும், அதன் சுபீட்சமும், சமாதானமும், மக்கள் செய்யும் இது போன்ற அலுவல்களைத்தான் நம்பியிருக்கிறது' என்று அவர் கூறுகிறார்.

ஒரு புதிய கால்வாய் பாய்ந்தோடுகிறது; அதற்குமேல் உள்ள பாலத்திலிருந்து பார்த்தால் சுற்றுப்புறங்களில் எல்லாமே தெரிகிறது. இடது பக்கம் நிலம் உயர்ந்து உயர்ந்து ஒரு சிறிய சிவப்புக் குன்றில் போய்ச் சேருகிறது. அதன் அடிவாரத்தில் இராமதண்டலம் ஏரி. வலதுபக்கம் வயல்களுக்கு அப்பால் கிட்டத்தட்ட 350 ஏக்கர் ஆயக்கட்டுப் பகுதியைக் கொண்ட மற்றோர் ஏரி. செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒத்திக்காடு கிராமத்தில்தான் இந்தக் காட்சி!

இந்தப் புதிய கால்வாய் உயர்ந்த நிலப் பகுதியையும், மேல் ஏரியையும் வயல்கள் வழியாக பாசன ஏரியுடன் இணைக்கிறது. இதன் நீளம் 1700 அடி.

கீழ் ஏரியில் உள்ள தண்ணீர் பாசனத்திற்குப் போதாது. விவசாயிகள் இதுவரை மிகவும் சிரமத்துக்குள்ளாகி வந்தார்கள். ஜூலை மாதத்தில் ஏதோ மழை பெய்கிறது. ஆனால் கொளுத்தும் வெயிலினால் காய்ந்து கிடக்கும் நிலத்துக்கு இந்த மழையின் நினைவுகூடப் பசுமையாக இல்லை. டிசம்பர் மாதத்தில் பெய்யும் மழைதான் சாகுபடிக்கு உதவுகிறது.

இப்போது இந்தக் கால்வாயில் தண்ணீரே இல்லை; கீழ் ஏரியில் சேறு படிந்து கிடக்கிறது; ஆனால், டிசம்பர் வந்துவிட்டால் இந்த நிலப்பரப்பு முழுவதும் ஒரு வடிகால் பகுதியாக மாறிவிடும். அப்போது இந்தப் பாசன ஏரியில் தண்ணீர் நிறைந்திருக்கும்.

இந்தியாவில் இத்தகைய கால்வாய்கள் ஆயிரக்கணக்கில் இருக்கும். பிறகு ஏன் இந்த ஒரு கால்வாயை மட்டும் குறிப்பிட வேண்டும்? இதற்கு ஒரு நல்ல காரணம் இருக்கிறது 'நாடெங்கிலும் சேனைகள் வளர்ந்து வருகின்றனவே' என்று மக்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போது, ஒரு 'புது ரக சேனை' செய்துவரும் செயலான அலுவல்களுக்கு இந்தக் கால்வாய் ஓர் எடுத்துக்காட்டு; ஆதலால்தான், இந்தக் கால்வாய்க்கு மட்டும் அதிக முக்கியத்துவம்.

சீரணி என்றாலே வள வாழ்வுக்கான படை என்றுதான் பொருள். 1967 ஜூன் 17-ம் நாள் தமிழக முதலமைச்சர், சட்டமன்றத்தில், சீரணி அமைப்பையும் அதன் நோக்கங்களையும் அறிவித்தார். அப்போது அவர் சொன்னார்:—

"அரசாங்கம் வகுக்கும் திட்டங்களும், அவற்றை நிறைவேற்றுவதில் நிர்வாகத் துறையினர் காட்டும் திறமையும் அக்கறையும் மட்டும் இருந்தால் நாட்டில் ஒரு புதிய சமூக விழிப்புணர்வை உருவாக்கிவிட முடியாது. நாம் ஓர் உணர்ச்சி வேகத்தை தூண்டிவிட வேண்டும். இந்த உணர்ச்சி வேகம், சமூகத்தைத் தட்டி எழுப்ப வேண்டும். ஒரு புதிய சமூக முறைமையை உருவாக்குவதில் ஒவ்வொருவரும் பங்கு வகிக்கும் வகையில் இது தூண்டிவிட வேண்டும்.

"நமது மக்களுள் சில ஆயிரக்கணக்கானவர்கள் தங்களுக்காகவும், தங்கள் குடும்பங்களுக்காகவும் இயன்றதைச் செய்த பிறகு ஒரு நாளைக்கு ஒரு மணி நேர உழைப்பையாவது நாட்டின் பொது நலனுக்காக வழங்கினால், நமது சமூகத்தின் முன்னேற்றம் உறுதியாகிவிடும். ஆயிரக்கணக்கான மக்கள் இவ்வாறு கருதுகிறார்கள் என்ற நம்பிக்கையில் அரசாங்கம் முதல் நடவடிக்கையாக சீரணிப் படையை அமைக்கத் தீர்மானித்திருக்கிறது.

'ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இந்த அணியின் உறுப்பினர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து ஊதியம் கிடைக்காது; ஆனால், வேண்டிய கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் கிடைக்

(4-ம் பக்கம் பார்க்க)

படி அரிசித் திட்டத்துக்கு மத்திய அரசு உதவுமா?

விரிவுபடுத்துவது பற்றி முதலமைச்சர் அண்ணா கருத்து

மதுரை, ஜூன் 30—

இங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள், படி அரிசித் திட்டம்பற்றிக் கேட்கப்பட்ட கேள்விகட்குப் பதிலளித்ததாவது:—

"படி அரிசித் திட்டத்துக்குப் பணவுதவி செய்யும் படி மத்திய அரசிடம் கேட்பது மிகவும் நியாயமான கோரிக்கையேயாகும்.

"இரண்டாவது நிதிக்குழு கூட இது பற்றிப் பரிந்துரை செய்துள்ளது.

"பல்வேறு மாநிலங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யும்போது, மக்களுக்கு மலிவு விலையில் அரிசி கிடைப்பதற்காக மாநில அரசுகள் வழங்கியுள்ள நிதியுதவியையும் மத்திய அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று நிதிக்குழு பரிந்துரைத்திருக்கிறது.

"அறுவடையைப் பொறுத்தும், மத்திய அரசினர் நிதியுதவியைப் பொறுத்தும், படி அரிசித் திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவது பற்றிய முடிவு செய்யப்படும்.

நெல் கொள்முதல் விலையை உயர்த்தவேண்டும் என்று இராசபாளையம் காங்கிரசு மாநாட்டில் கோரப்பட்டது குறித்து அண்ணாவிடம் கேட்கப்பட்டபோது,

"அவர்கள் அவ்விதம் கோருவதற்கு அவர்கட்கு எல்லா உரிமையும் இருக்கிறது"

என்று பதிலளித்த அண்ணா, அதுபற்றி மேலும் விரிவான கருத்தறிவிக்கவில்லை.

என். சி. சி. படை

"தேசீய மாணவர் படை (என்.சி.சி.)-யை மீண்டும் தமிழகத்தில் ஏற்படுத்துவதுபற்றித் தமிழக அரசு இன்னும் முடிவு எதுவும் எடுக்கவில்லை: இது தொடர்பாக மத்திய அரசுடன் கடிதப் போக்குவரத்து நடந்துவருகிறது" என்றும் முதலமைச்சர் அண்ணா அவர்கள் விளக்கினார்.

பானையே பதில் சொல்லும்!

"தமிழ்நாட்டில் சட்டம்—ஒழுங்கு கெட்டுவிட்டதாக டி.டி.கே. போன்ற காங்கிரசுத் தலைவர்கள் சொல்லுகிறார்கள்!

"அவர்கள் ஆட்சிக் காலத்தில் நாங்கள் தேர்தல் நேரத்தில் ஒட்டிய சுவரொட்டிகளை அப்புறப்படுத்தினார்கள்; இப்போது அவர்கள் எதிர்க் கட்சியாக இருக்கிறார்கள்; இருந்தாலும், பானை கட்டுகிறார்கள்! இது அக்கிரமமான அரசாங்கமாக இருந்திருந்தால், பானை ஒன்று தப்பியிருக்குமா? ஆகவே, அவர்கள் கட்டிய பானையே சொல்லும்—'தமிழ்நாட்டில் சட்டம்—ஒழுங்கு சரியாக இருக்கிறது' என்று!

'சட்டம்—ஒழுங்கு ஒருசிறிதும் குலையவில்லை என்பதற்கு உதாரணம் தர விரும்புகிறேன்;—காமராசரைத் தோற்கடித்த கழகத் தோழர் சீனிவாசன், 'தொழில் தகராறு ஒன்றில் ஒழுங்கைமீறி நடந்துவிட்டார்' என்று கைது செய்ய உத்தரவிடப்பட்டது; அதேபோல், நாகர்கோவில் தொகுதி கழகச் சட்டமன்ற உறுப்பினர், 'தடையை மீறினார்' என்பதற்காக அவர்மீது வழக்குப் பதிவு செய்தோம்!

"டில்லியில் காமராசர் வீடு தாக்குதலுக்குள்ளானபோது—சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி குத்தப்பட்டபோது — பெண்களை வாலிபர்கள் அவமானப்படுத்தியபோது—இந்தச் சட்டம், ஒழுங்கு என்னவாயிற்று? அதைப் பற்றி இந்தக் காங்கிரசுக்காரர்களின் வாய் திறந்தது உண்டா?

"'போட்டிருக்கும் சட்டை, கறுப்பா-சிவப்பா, கதரா என்று பார்க்காதீர்கள்; செய்த குற்றமென்ன என்று பார்த்து வழக்குத் தொடருங்கள்; குற்றம் செய்யவில்லையென்றால் வழக்கு மன்றத்தில் வாதாடி வெற்றி பெறட்டும்' என்று நாங்கள் கூறினோம்!

"இதுவா சட்டம் — ஒழுங்கு செயலிழந்துவிட்ட நிலை? ஆகவே, 'சட்டம் கெட்டது—ஒழுங்கு கெட்டது' என்பதெல்லாம் வீண் பழிசுமத்தும் பேச்சே தவிர, வேறெதுவும் இல்லை!'

--அறிஞர் அண்ணா

(தென்காசி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்)

அழுக்கைப் போக்குவதற்குள் அவசரம் ஏன்?

"15 மாத காலத்தில், 'என்ன சாதித்து விட்டீர்கள்?' என்று கேட்கும் காங்கிரசுக்காரர்களுக்குக் கூறிக் கொள்கிறேன்—துணியில் கொஞ்சம் அழுக்குப் படிந்திருந்தால் துவைத்துவிடலாம்; அதிகமான அழுக்குப் படிந்திருந்தால் வெள்ளாவியில்தான் வைக்கவேண்டும். அதுபோல், நான், இருபதாண்டுக்காலமாகக் காங்கிரசு செய்த அழுக்கைப் போக்கிக் கொண்டிருக்கிறேன்! ஓங்கி அடித்தால் துணியே கிழிந்துவிடும்; எனவே, மெதுவாகத் துவைக்க வேண்டியிருக்கிறது! போக்க முடியாத அழுக்கைத் துணியில் உண்டாக்கிய காங்கிரசுக்காரர்களே—அவசரப்பட வேண்டாம்!

"காங்கிரசுக்காரர்கள் அயல் நாடுகளில் கோடிக்கணக்கில் கடன் வாங்கி, திட்டங்களுக்குச் செலவழித்திருக்கிறார்கள்; ஆனால் அது, நாட்டு மக்களுக்குப் பயன்படவில்லை!

"ரூ. 400 கடன் வாங்கி மாடு வாங்கினால் பலனுண்டு; மாட்டுப் பொம்மை வாங்கினால் அதனால் என்ன பலன்? அதுபோல், கோடிக்கணக்கில் கடன் வாங்கியிருந்தும், மக்களுக்குப் பயன்படாத வகையில் செலவழித்தார்கள். இருந்தும், இன்றையதினம் நாம செட்டாகக் குடும்பம் நடத்துவதைப் பார்த்துக் கேள்வி கேட்கிறார்கள்!

"கடன் சுமையோடு என்னிடம் ஆட்சியை ஒப்படைத்தார்கள்! அரிசிப் பஞ்சம் தலைவிரித்தாடிய நிலையில் ஆட்சியை ஒப்படைத்தார்கள்!

"ஓட்டை அடுப்பையும் ஈர விறகையும் தந்துவிட்டு, 'என்ன—இவ்வளவு நேரமா?' என்று கேட்கும் விவரமறியாதவனைப் போல், காங்கிரசுக்காரர்கள் கேட்கிறார்கள்!"

--அறிஞர் அண்ணா

(தென்காசி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்)

2-7-68

சேது சமுத்திரத் திட்டம்--நம்பிக்கை தரும் தகவல்

ஆய்வுக் குழுவின் அறிக்கை மத்திய அமைச்சரிடம் தாக்கல்

ரூ. 40 கோடிக்குள் நிறைவேற்றிவிட முடியும் என நிபுணர்கள் முடிவு

சென்னை, சூன் 30—

“இராமேசுவரம் வழியாகக் கால்வாய் வெட்டி பாக் ஜலசந்தியையும்—இந்துமகா சமுத்திரத்தையும் இணைப்பதே சேது சமுத்திரத் திட்டத்தின் நோக்கம். இலங்கைக்கும்—இந்தியாவுக்கும் இடையிலுள்ளது பாக் ஜலசந்தி.

இராமேசுவரத்தின் தெற்கில் ஒரு தொடர்புக் கால்வாய்—இராமேசுவரத்தினூடே ஒரு கால்வாய்—வடக்கே ஒரு தொடர்புக் கால்வாய்—ஆகியவை கொண்டதாக இணைப்புக் கால்வாய் அமைக்க வேண்டுமென்பதே இந்தத் திட்டமாகும்.

இந்தத் திட்டத்துக்கு ரூ. 35 கோடியிலிருந்து ரூ. 40 கோடி வரை செலவாகுமென்று மதிப்பிடப்படுகிறது. இந்தத் தொகைக்குள் சுலபமாகத் திட்டத்தை முடித்துக் கொள்ள முடியும.

சேது சமுத்திரத் திட்ட அறிக்கையை, திட்ட ஆலோசகர் சி. வி. வெங்கடேசுவரன், மத்திய கப்பல்—போக்குவரத்து அமைச்சர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் அவர்களிடம் கொடுத்தார்.

இந்தத் திட்டம் தொழில் நுட்ப அளவில் இயலக்கூடியத—பொருளாதார ரீதியில் தன்னைச் சரிக்கட்டிக்கொண்டு போகக்கூடியது தானா என்பது பற்றி வெங்கடேசுவரனும், அவருக்கு உதவியாக என்சினியர்கள் குழு ஒன்றும் கடந்த மூன்றுண்டுகளாக விரிவாகப் பரிசீலனை நடத்தி வந்திருக்கிறது.

இராமேசுவரம் தீவு வழியாகக் குறுக்குவழிக் கால்வாய் ஒன்றை வெட்டுவதென அவர்கள் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

பாக் ஜலசந்தியில் சில இடங்களில் ஆழம் குறைவாதலால், சுமார் 25 மைல் தொலைவுக்குக் கால்வாயை தூர் வாரி ஆழப்படுத்த வேண்டியிருக்கும்.

கால்வாயில் தூர் வாரி ஆழப்படுத்துவதும், அதைப் பராமரித்து வருவதும் தனிப் பிரச்சினைகளாகும். இவை பற்றி நடத்திய ஆராய்ச்சிகள் திருப்திகரமாயிருந்ததாகக் கூறப்படுகிறது.

கடலின் அடித்தளத்தில் ஏற்படும் மாறுதல்கள்—தூர் சேரும் அளவு, அந்த வண்டலில் எவ்வளவு அடித்துச் செல்லப்படுகிறது—எவ்வளவு அடியிலேயே தங்கிவிடுகிறது—என்பது போன்றவைகளில் பம்பாய் அணுசக்தி நிறுவனத்தின் உதவியுடன் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன; நவீன அணுசக்தி சாதனங்கள் மூலம் இவை நடத்தப்பட்டன.

“அவ்வப்போது ஓரளவு தூர் வாரி வந்தால், இந்தக் கால்வாயைச் சரிவர பராமரித்துவர முடியும்” என்று இந்த ஆராய்ச்சிகளிலிருந்து தெரிகிறது.

திட்டம் சம்பந்தமாக மேலும் ஓராண்டுக் காலத்துக்குப் பூர்வாங்க வேலைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இதையும் சேர்த்து ஐந்தாண்டுக் காலத்தில் திட்டத்தை நிறைவேற்றி முடித்துவிட முடியும் 1969 ல் வேலையை மேற்கொண்டால், 1974-ல் நிறைபெற்றுவிட முடியும்.

ஆண்டுக்குக் குறைந்தபட்சம் 4-சதவிகித அளவில் போக்குவரத்து அதிகரித்தாலேகூட திட்டத்தில் முதலீடு செய்வதற்காக வாங்கும் கடனைச் செலுத்திவிட்டு, ரிசர்வ் நிதி சேர்த்து வைத்துக்கொள்ள முடியும்.

ஆரம்பக் கடனுக்கு அதிக வட்டிவிகிதம் தருவதாக வைத்துக்கொண்டாலும்கூட, இது சாத்தியமே.

30-ஆண்டுக் கழித்து ஏராளமான ரிசர்வ் நிதி சேர்ந்திருக்கும்; பராமரிப்புச் செலவு அதிகமாக உயர்ந்துவிடாது; எனவே காலப்போக்கில் நிகர இலாபம் அதிகரித்துக் கொண்டே போகும்.

அரசு ஊழியர்கட்குக் குடியிருப்பு

96 வீடுகள் கொண்ட காலனி ஒன்றைத் தமிழக சட்ட அமைச்சர் செ. மாதவன் இன்று இங்கு திறந்துவைத்தார்.

அரசு ஊழியர்களுக்காக மாநில வீட்டு வசதிக் கழகம் இவற்றைக் கட்டியுள்ளது.

சேலம்—ஏர்காடு சாலையில் இக்காலனி அமைந்துள்ளது. ரூ 10 இலட்சம் செலவில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

வீட்டு வசதிக் கழகத் தலைவர் பூவராகமூர்த்தி பேசுகையில், குறிப்பிட்டதாவது:—

“இங்கு 16 ஏக்கர் நிலத்தில் ரூ 54 38 இலட்சம் செலவில் 426 வீடுகள் அரசு ஊழியருக்காகக் கட்டும் திட்டம் உள்ளது; இத்திட்டத்தின் ஒரு பகுதியே இக்காலனியாகும்.”

தமிழ்ப் பயிற்று மொழி வகுப்பில் சேர ஆர்வம்

200 இடங்களுக்கு 353 பேர் மனு

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தகவல்

அண்ணாமலைநகர், சூன் 30—அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழைப் பயிற்று மொழியாக்குவதற்கு நல்ல வரவேற்பு இருப்பதாகத் தெரிய வருகிறது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புகுமுக வகுப்புக்கு மொத்தமுள்ள 800 இடங்களுக்கு 2,789 விண்ணப்பங்கள் வந்திருப்பதாகத் தெரிகிறது.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய இறுதி நாளுக்கு முன்பாகவே 60 சதவிகித இடங்களுக்கு மாணவர்கள் சேருவதற்கான அனுமதிச் சீட்டுகளை தகுதி—திறமை அடிப்படையில் அனுப்பப்பட்டிருக்கின்றன.

மீதமுள்ள இடங்களுக்குத் தேவையான மாணவர்களை மூவர் அடங்கிய குழு ஒன்று தேர்ந்தெடுக்கும்.

தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்ட வகுப்புகளில் 200 இடங்கள் உள்ளன; இவற்றிற்கு 353 விண்ணப்பங்கள் வந்துள்ளன.

சர்க்கரையின் அளவை அதிகரிக்க வழி என்ன?

தமிழக அரசின் முயற்சிக்கு டெல்லி இணங்குமா?

கொடுத்துவந்த அளவையும் குறைத்துவிட்ட அநீதி--நிலைமைபற்றி அதிகாரி விளக்கம்

சென்னை, சூன் 30—

“தமிழகத்துக்கு மத்திய அரசு ஒதுக்கும் ‘லெவி’ சர்க்கரை (கட்டுப்பாட்டு விலையில் விற்பதற்கான சர்க்கரை) அளவு அதிகரிக்க வேண்டுமென்ற தமிழக அரசின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்காதவரையில், பங்கீட்டுக் கார்டுகளுக்குச் சர்க்கரை அளவை உயர்த்துவது இயலாது”

என்று ஓர் அதிகாரி தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

‘தமிழகத்துக்கு இப்போது மாதம் 6,000 டன் ‘லெவி’ சர்க்கரை ஒதுக்கப்படுகிறது முந்தைய ஆண்டுகளில் 15 000 டன் முதல் 18,000 டன் வரை கிடைத்துவந்ததை ஒப்பிடும்போது இந்தஅளவு மிகக் குறைவாகும். நிலைமையைச் சீரமைக்க வேண்டுமெனக் கருதி மாநிலத்துக்குக் கூடுதலாக 4,000 டன் லெவி சர்க்கரை ஒதுக்குமாறு தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டுககொண்டிருந்தது.

“நகர்ப் புறங்களில் இப்போது தரப்படும் ரேஷன் சர்க்கரை அளவைக்கூட கிராமப்புறங்களில் வழங்கவேண்டிய அளவைக் குறைத்துக்கொண்டு தான் தரவேண்டியுள்ளது.

“மாநில அரசு தானக முயற்சியை மேற்கொண்டு, தமிழக சர்க்கரை ஆலைகளுடன் ஓர் ஏற்பாட்டைச் செய்து கொண்டுள்ளது; அதன்படி தமிழக அரச, 40 சதவிகித வெளிமார்க்கெட் சர்க்கரையை மொத்தமாக ஆலைகளிடமிருந்து பெற்றுப் பெரும் அளவில் சர்க்கரையை ரேஷன் விலையைவிடக் கூடுதலாக — ஆனல் மற்ற மாநிலங்களில் நிலவும் விலையை விடச் சற்று குறைவாக விற்று வருகிறது.

ஒட்டல்கள், மிட்டாய் தயாரிக்கும் நிறுவனங்கள், ரொட்டிக் கடைகள் போன்ற—மொத்தமாகச் சர்க்கரையைப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு வெளி மார்க்கெட் சர்க்கரை ஒதுக்கப்படுகிறது. குறைந்த விலையில் தரப்படும் ரேஷன் சர்க்கரை இவர்களுக்கும் உண்டு; என்ற போதிலும், மொத்தமாகப் பயன்படுத்துவோருக்குச் சேர வேண்டிய ரேஷன் சர்க்கரை அளவு முழுவதையும் தனிப்பட்ட கார்டுதாரர்களுக்கே வழங்கப் படுகிறது.”

கூடுதலாகச் சர்க்கரை தேவைப்படும் தனி நபர்கள், ரேஷன் சர்க்கரையைத் தவிர வெளி மார்க்கெட்டில் நியாயமான விலையில் சர்க்கரை வாங்க அனுமதிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்ட யோசனையைப் பற்றி அவர் குறிப்பிடுகையில், அவர் சுட்டிக்காட்டியதாவது:—

‘அதற்குப் போதிய கோரிக்கை இருக்குமானல், அரசு அந்த யோசனையை ஏற்கத் தயங்காது

இந்த யோசனை ஏற்கப்பட்டால், உபயோகத்துக்கு 8 கிலோ தேவையுள்ளவர்கள் தமது ரேஷன் கார்டின் மூலம் 3 அல்லது 4 கிலோ சர்க்கரையைக் கிலோ ரூ. 1.75 விலைக்கு வாங்க முடியும்; பாக்கி 4 அல்லது 5 கிலோ சர்க்கரையை வெளி மார்க்கெட்டில் கிலோ ரூ, 3.50 கொடுத்து வாங்கலாம்.

இப்போது தமிழகத்துக்கு மாதம் 6,500 டன் லெவி சர்க்கரை கிடைக்கிறது.

சர்க்கரை மீதுள்ள கட்டுப்பாடு ஓரளவு நீக்கப்பட்டதன் காரணமாக, ஆலைகளில் உற்பத்தியாகும் சர்க்கரையில் 40 சதவிகிதம் வெளிமார்க்கெட்டுக்கும், 60 சதவிகிதம் கட்டுப்பாடு விலையில் விநியோகிப்பதற்காகவும் ஒதுக்கப்படுகிறது.”

சமுதாயச் சீர்திருத்த---விவசாய மாநாடுகள்

மாயூரம்-மணல்மேட்டில் சிறப்பான ஏற்பாடுகள்

மாயூரம், சூன் 30—

மாயூரத்திலிருந்து 16-கல் தொலைவிலுள்ள மணல்மேடு என்னும் எழில்மிகுந்த சிற்றூரில, சூலை 12, 13-ம் நாட்களில் நடைபெற இருக்கும் சமுதாயச் சீர்திருத்த—விவசாய மாநாடுகள், இந்தப் பகுதியில் நல்ல விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

மாயூரத்தில் தொடங்கி—வழியிலுள்ள நீடூர், வில்லியநல்லூர், பட்டவர்த்தி, கிழாய், திருவாளப்புத்தூர், இளந்தோப்பு, மணல்மேடு ஆகிய ஊர்களிலுள்ள கழகத் தோழர்களும், விவசாயப் பெருமக்களும் இப்போதிருந்தே தங்கள் பகுதிகளை அலங்கரிக்கத் தொடங்கிவிட்டனர்.

மணல்மேடு மாரியம்மன் கோவிலுக்குப் பின்புறமுள்ள பெரிய திடல் துப்புரவு செய்யப்பட்டு மேடையும் அமைக்கப்படுகிறது.

பந்தல் அமைப்பு வேலைகளும் துவங்கிவிட்டன.

மாநாடு நடைபெறும் நாட்களில் — சிதம்பரம், சீர்காழி, பொறையார், பேரளம், மாயூரம், கும்பகோணம் ஆகிய ஊர்களிலிருந்து தனிப் பேருந்து வண்டிகள் விடுவதற்கு ஏற்பாடுகள் நடக்கின்றன.

கண்கொள்ளா விவசாயக் கண்காட்சி — விவசாயிகள் பங்குபெறும் விமரிசையான ஊர்வலம் — சொற்பெருக்குகள்—தீர்மானங்கள்—கலை நிகழ்ச்சிகள்—‘காகிதப் பூ’ நாடகம்—நான்கு அமைச்சர்கள் பங்கேற்பு ஆகியவை மாநாட்டின் சிறப்பான அம்சங்களாகும்.

மாநாட்டினை முன்னிட்டு கீழ்க்காணும் இடங்களிலிருந்து அந்த நாட்களில் மணல்மேட்டிற்குத் தனிப் பஸ்கள்விட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மாயூரம்—மணல்மேடு
கும்பகோணம்—மணல்மேடு
சீர்காழி—மணல்மேடு
அணைக்கரை—மணல்மேடு
காவிரிப்பூம்பட்டிணம்--மணல்மேடு

பர்மா--இலங்கை அகதிகட்கு மறுவாழ்வு

பாகிஸ்தான் அகதிகட்கு வழங்கும் வசதியெல்லாம் கிடைக்கும்

தமிழ்நாட்டில் தனி ஏற்பாடுகள்பற்றி விளக்கம்

சென்னை, சூன் 30—

“இலங்கை, பர்மாவிலிருந்து வரும் அகதிகளில் வயது வந்தோருக்காகத் தமிழகத்தில், மூன்று தொழில் பேட்டைகள் நிறுவப்படும். இதற்கு மத்திய அரசு நிதி உதவிபுரியும்.

‘இவற்றின் நிர்வாகம் தமிழக அரசுக்காவது அல்லது இதற்கென நிறுவப்படும் தனிக் கூட்டுறவுகளுக்காவது மாற்றப்படும். தனிக் கூட்டுறவுகளை அமைக்கும் பிரச்சினை பரிசீலனையில் உள்ளது.

‘இந்தத் தொழிற்பேட்டைகள் மதுரை, திருச்சி, கும்மிடிபூண்டி ஆகிய இடங்களில் ஏற்படும். சிமெண்டு, செங்கல், ஓட்டு வில்லைகள், கொத்தர் கருவிகள் உற்பத்திக்கான தொழில் பேட்டைகளாக இவை விளங்கும்.

“தென்னிந்திய ஐக்கியத் தோட்ட அதிபர்கள் சங்கம் சுமார் 4000 இலங்கை அகதிகளுக்கு வேலை தர முன்வந்துள்ளது”

என்று, மத்திய அரசின் அகதிகள் நலத்துறைத் துணையமைச்சர் திரு. டி. ஆர். சவாண் தெரிவித்தார்.

“பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளைப் போலவே, பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் குடிபெயர்ந்து வரும் இந்திய மரபினரை ஏற்றுக்கொள்ளவும், அவர்கட்கு மறுவாழ்வளிக்கவும் தேவையான உதவிகளையெல்லாம் மத்திய அரசு அளிக்கும்” என்றார் அவர்.

(4-ம் பக்கம் பார்க்க)

இன்பத் தமிழில் பேசி அன்பைப் பெற முயற்சி

கழக ஆட்சியில் டெல்லி அமைச்சர்களின் மனமாற்றம்

சீரங்கம் ஜூலை 1—

"பணத்தையே பெரிதாகக் கருதக்கூடாது; 'விரைவில் செல்வராகிவிட வேண்டும்' என்ற மனப்பான்மை கூடாது"

என்று, மத்திய போக்குவரத்துத் துணை அமைச்சர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ், சீரங்கம் நகராட்சி அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

கே. எம். பாலசுப்பிரமணியம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ள திருக்குறள் பிரதி, டாக்டர் ராவிடம் அளிக்கப்பட்டது.

டாக்டர் ராவ் தமிழில் பேசத் துவங்கியதும் அனைவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

"55 ஆண்டுகள் கழித்து நான் தமிழில் பேசத் துவங்கியிருக்கிறேன்" என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த நான்கு நாட்களில் தஞ்சை மாவட்டத்தில் 17 கூட்டங்களில் தமிழில் பேசியதாகவும், தமது தாய்மொழி கன்னடம் என்றும் அமைச்சர் கூறினார்.

திரு. வி. கே. ஆர். வி. ராவ் கன்னடக் குடும்பத்தைச் சேர்ந்தவரானாலும், தமிழ்நாட்டில் காஞ்சிபுரத்தில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்பெல்லாம் வடக்கேயிருந்து இங்கு வரும் அமைச்சர்களெல்லாம் தங்கள் தாய் மொழி இந்தியாக இல்லாவிட்டாலும்கூட, வேண்டுமென்றே இந்தியில் பேசுவதையும், தமிழ் தெரிந்த அமைச்சர்கள்கூட ஆங்கிலத்தில் பேசுவதையும் பெருமையாகக் கருதி அப்படிப் பேசினார்கள்.

இப்போது, 'தமிழில் பேசினால்தான் தமிழ் மக்களின் நன்மதிப்பைப் பெற முடியும்' என்ற நிலை, தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி ஏற்பட்ட பிறகு உண்டாகியிருக்கிறது என்பதையே திரு. ராவின் செயல் எடுத்துக்காட்டுகிறது.

முன்பு தமிழகத்தில் காங்கிரசு ஆட்சி இருந்த காலத்தில் 'நமஸ்தே' என்று தமிழ் மக்களைப் பார்த்துக் கூறிய இந்திரா காந்தி, கழக ஆட்சி மலர்ந்த பின், இங்கு வந்து தமிழில், 'வணக்கம்' என்று கூறியதும் இத்தொடர்பில் நினைவுகூரத்தக்கது.

பதவிக் காலம் நீடிப்பு

சென்னை, ஜூலை 2—

இவ்வாண்டு மார்ச் திங்கள் 25, 26-ம் நாட்களில், பஸ் தொழிலாளர் — மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறுகள் பற்றி விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட சோமசுந்தரம் குழுவின் பதவிக் காலத்தை, இன்று முதல் நான்கு மாத காலத்திற்கு நீடித்து தமிழக அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கழகத் துணைவேந்தர்களையும், தொழில் நுட்பக் கழக இயக்குநர்களையும், ஆராய்ச்சி நிலையத் தலைவர்களையும் திட்டக் குழுத் துணைத் தலைவர் பேராசிரியர் டி.ஆர். காட்கில் சேட்டுக்கொண்டிருக்கிறார்.

நான்காவது திட்ட அம்சங்கள் சம்பந்தமான விவாதங்களை நடத்திக் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு டாக்டர் காட்கில் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இதனால், நான்காவது திட்டம் சம்பந்தமான பிரச்சினைகளை விவாதிப்பதில் ஆசிரியர்களும், மாணவர்களும் பங்கு பெறமுடியும்.

இம்மாதிரியான கருத்தரங்குகளையும், விவாதங்களையும் ஏற்பாடு செய்வதற்குத் திட்டக் குழு உதவியளிக்கும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

திருத்தம்

நேற்று 'நம் நாடு' இதழ் நான்காவது பக்கத்தில், 'குடியரசுத் தலைவர் ஆட்சியின்கீழ் பீகார்' என்பதற்குப பதில், 'ஒரிசா' என்று சில இதழ்களில் தவறாக அச்சிட நேர்ந்துவிட்டது; 'பீகார்' என்று திருத்திப் படிக்க வேண்டுகிறோம்.

—ஆசிரிய

பொறியியல் கல்லூரிக்கு மாணவர் தேர்வு

ஜூலை 10-ல் பட்டியல் வெளியாகும்

சென்னை, ஜூலை 2—

எஞ்சினீயரிங் கல்லூரிகளில் சேருவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் எண்கள் ஜூலை 10-ம் நாள் அறிவிக்கப்படக் கூடும்.

சென்ற ஆண்டு இருந்தவர்கள் தான் இந்த ஆண்டும் தேர்வுக் குழுவில் உள்ளனர்.

தேர்வுக் குழு, சென்னை மாவட்டத்தில் மாணவர்கள் பேட்டியை முடித்துவிட்டது.

திருச்சியில் 4, 5-ம் தேதிகளிலும், மதுரையில் 6, 7-ம் தேதிகளிலும், கோவையில் 8, 9-ம் தேதிகளிலும் மாணவர்களுக்குப் பேட்டியளிக்கும்.

பி.ஏ., பிகாம். தேர்வு முடிவுகள்

சென்னை, ஜூலை 2—

1968 ஏப்பரல்—மே திங்களில் சென்னைப் பல்கலைக் கழகம் நடத்திய பி.ஏ., பி.எஸ்சி., குடும்பக் கலை, பி.காம். பரீட்சைகளில் தேறியவர்களின் எண்கள், பல்கலைக் கழக நூற்றாண்டு விழா கட்டிடத்தில் ஜூலை 23-ம் நாள் பிற்பகல் 2-மணிக்கு வெளியிடப் படும்.

அலட்சியத்தால் ஏற்பட்ட ஆபத்து

காரணமானவர்கட்கு தண்டனை

சென்னை, ஜூலை 1—

கடந்த சில வாரங்களாக சென்னையில் தொடர்ந்து நடைபெற்றுவரும் தீவிபத்தினையொட்டி சென்னை நகரக் காவல் துறையினர், இத் தீவிபத்து ஏற்படக் காரணமான சில பேர்மீது வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

இத்தீவிபத்து சம்பந்தமாக 9-பேர்மீது தொடரப்பட்ட வழக்குகளில் 4 பேர் பெண்கள்; இவர்களின் அலட்சியம் காரணமாகப் பல்வேறு இடங்களில் தீவிபத்து ஏற்பட்டிருக்கிறது என்பது முடிவு செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சிலருக்கு சிறைத் தண்டனையும், சிலருக்கு அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது.

தீங்கு விளைவிக்கின்ற செயல்களில் ஈடுபட்டதன் காரணமாக மூன்று சிறுவர்களைப் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

வீடுகளில் உள்ள தாய்மார்கள் அலட்சியமாக இருந்ததற்காக நகரப் போலீசார் நடவடிக்கை எடுத்திருப்பது இதுவேமுதல் தடவையாகும்.

இன்று மாலை 3-மணிக்கு கொருக்குப்பேட்டைக்கு அருகிலுள்ள நேரு நகரில் ஏற்பட்ட தீவிபத்தில் 140 குடிசைகள் எரிந்து போயின. இவ்விபத்தினால் 165 குடும்பங்கள் வீடிழந்திருக்கின்றன.

அரசு ஊழியர்கட்கு புதிய வசதி

கடனில் கைத்தறித் துணி வாங்கலாம்

வேலூர், ஜுன் 30—

வேலூர் அரசு ஊழியர்களுக்குக் கடனுக்குக் கைத்தறித் துணிகளை விற்பதற்கான யோசனையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த யோசனையை, கைத்தறிகள் இயக்குநர் அரசிடம் அளித்திருக்கிறார்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும் அதன் கிளைகளும் அவற்றின் விதிகளுக்கு உட்பட்டு அரசு ஊழியர்களுக்குத் துணியைக் கடனுக்கு விற்பனை செய்யும்.

இந்தத் திட்டத்தின்படி, அரசின் கடைநிலை ஊழியர்கள் உட்பட நிரந்தரமாக்கப்பட்ட அரசு ஊழியர்கள், ஒரு மாத அடிப்படைச் சம்பள மதிப்புள்ள துணிகளைக் கடனுக்கு ஆண்டுக்கு ஒருமுறை வாங்கலாம்.

ஐந்து ஆண்டு சர்வீசுக்கும் குறையாத தற்காலிக ஊழியர்களும் அவ்வாறு கடனுக்கு வாங்கலாம்; ஆனால் அவர்கள் அதற்குப் பத்திரம் எழுதித் தரவேண்டும்.

மதுரைக்குத் தனி பஸ்

சென்னை, ஜூலை 2—

இம்மாதம் 6-ம் நாள் சென்னையிலிருந்து மதுரைக்கு மாநில அரசுப் போக்குவரத்துத் துறை, ஒரு தனி பஸ் விடும்.

அன்று காலை 8-மணிக்கு சென்னை எஸ்பிளனேடிலிருந்து புறப்படும் இந்த பஸ், விழுப்புரம், திருச்சி வழியாகச் செல்லும்.

பர்மா-இலங்கை...

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

செய்தியாளர்கட்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:—

"அடுத்த 15 ஆண்டுகளுக்குப் பல சட்டங்களில் இதற்கான வேலைத் திட்டங்களை வகுக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளது.

1964 அக்டோபர் முதல் இது வரை சுமார் 1,59,000 பேர் பர்மாவிலிருந்து வந்துள்ளனர்; இவர்களில் 90,000 பேர் சென்னைக்கு வந்துள்ளனர். சராசரியில் ஒவ்வொரு குடும்பத்திலும் 3.2 பேர் இருக்கிறார்கள். இம் மாதம் 3,000 பேர் பர்மாவிலிருந்து சென்னைக்கு வந்துள்ளனர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

35,000 பேருக்கு வியாபாரம் செய்வதற்குக் கடன் தரப்பட்டது.

11,000 பேருக்கு வேலை தேடித் தரப்பட்டது.

1,000 பேருக்குச் சாகுபடி நிலம் வழங்கப்பட்டது.

1,600 பேருக்கு கடை மனைகள் வழங்கப்பட்டன.

இந்தியாவுக்கு வரும் இலங்கை அகதிகள் மறுவாழ்வுக்கான திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

இந்த அக்டோபரில் 15,000 அல்லது 20,000 பேர் வருவார்கள்.

இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து வரும் இந்தியரில் 90 சதவிகிதம் பேர் தோட்டத் தொழிலாளிகளாவர்.

பர்மாவிலிருந்து வரும் இந்தியரில் பெரும்பாலோர் வியாபாரிகளாவர்.

இலங்கை, பர்மா போன்ற நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வரும் இந்திய மரபினரின் பிள்ளைகளுக்கென்று ஒவ்வொரு தொழிற் பயிற்சிக் கழகத்திலும் 5 சதவிகிதம் இடங்களை ஒதுக்கும்படி எல்லா மாநில அரசுகளையும் மத்திய அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. தமிழகத்தில் அவர்களுக்கு அதிக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதென்று தெரியவருகிறது.

ஒவ்வொரு அகதிக் குடும்பத்தையும் புதுக் குடி வைத்து வாழ்வளிப்பதற்கு அரசுக்கு ரூ. 15,000 வீதம் செலவாகும்.

சூலூர் பேரூராட்சி இடைத் தேர்தல்

கழக வேட்பாளர் வெற்றி

28—6—68-ல் நடந்த சூலூர் முதல் வார்டு பேரூராட்சி மன்றத் தேர்தலில், தி. மு. க. வேட்பாளர் எஸ். என். சின்னையன் 246 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரசு வேட்பாளர் திரு. மாரப்பன் 194 வாக்குகள் பெற்றுத் தோல்வியடைந்தார்.

காங்கிரசு வேட்பாளருக்குக் கோவை மாவட்ட முன்னாள் காங்கிரசுத் தலைவரும் இந்நாள் பல்லடம் தாலுகா காங்கிரசுத் தலைவரும் தற்போதைய மேலவை உறுப்பினருமான எஸ்.வி.இலட்சுமணன, சூலூர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஆர். ஆறுமுகம், சூலூர் பேரூராட்சித் தலைவர் எஸ். கே. கருப்பண்ணன், மற்றுமுள்ள காங்கிரசுப் பிரமுகர்களும் முழுமூச்சாகத் தேர்தல் வேலை செய்தும், காங்கிரசு வேட்பாளர் 52 வாக்குகள் குறைவாகப் பெற்றுப் படு தோல்வியடைந்தார்.

அரூர் நில அடமான பாங்கி டைரக்டர் தேர்தல்

கழகத் தோழர் வெற்றி

23—6—68-ல் நடைபெற்ற அரூர் நில அடமான பாங்கி டைரக்டர் தேர்தலில் கழகத் தோழர் கே.என். சுந்தரம் போட்டியிட்டார்; அவரை எதிர்த்து கௌவள்ளி தனபால் என்கிற காங்கிரசுக்காரர் (பாரதி பஸ் உரிமையாளர்) போட்டியிட்டார்.

கழகத் தோழர் 179 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

டெல்லியிடம் கேரள அரசு கோரிக்கை

திருவனந்தபுரம், ஜுன் 30—

"கேரள மாநிலத்திற்குத் தேவையான அரிசிக்கு ஆகும் செலவுகளையும், மாநில அரசு ஊழியர்களுக்கான பஞ்சப் படி அளிப்பதற்காகும் செலவினையும் சரிக்கட்ட மத்திய அரசு உதவித் தொகை அளிக்க வேண்டும்" என்று ஐந்தாவது நிதிக் குழுவிடம் கேரள அரசு வற்புறுத்தும்.

1968-ம் ஆண்டு ஜுன் முதல் நாளிலிருந்து கேரள மாநில அரசு ஊழியர்களுக்குப் பஞ்சப் படி உயர்வுக்காக ரூ. 2.23 கோடியும் அரிசிக்காக அளிக்கப்படும் உதவித் தொகை ரூ. 15 கோடியும் ஆகும் என்று மதிப்பிடப்படுகிறது.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யறிந்த ஊர் பொதுமக்கள் ஓடி வந்தனர்; உடனே போலீசாரும் வந்து, தவறாக நடந்து கொண்ட மத்திய போலீசுக் காரரைக் கைது செய்து, முகாமுக்குள் கொண்டுபோய் அடைத்து வைத்தனர்.

இதற்குள் மக்கள் போலீசு முகாம் எதிரில் திரண்டுவிட்டனர்; 'அந்த நபரை வெளியே விடுங்கள்; நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்' என்று அவர்கள் கூறினர்; அதற்குப் போலீசார் இசைய மறுத்து விட்டனர்; இதனால் ஆத்திரமடைந்த கிராம மக்கள் போலீசு முகாமை நோக்கிக் கற்களையும், தடிகளையும் வீசினர்; உடனே மத்திய போலீசுக்காரர்கள், மக்கள் கூட்டத்தின்மீது பாய்ந்து தடியடி செய்தனர். இருதரப்பினரும் பயங்கரமாக மோதிக்கொண்டனர்.

இதற்கிடையே ஆந்திரப் போலீசார் லாரியில் வந்திறங்கி தடியடி செய்தும் கூட்டம் கலைய மறுத்ததால், துப்பாக்கியால் சுட்டனராம்; இதனால் ஒருவர் குண்டுக்காயமடைந்து மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இருதரப்பிலுமாக 40 பேர் காயமடைந்தனர்; 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

"தவறாக நடந்த போலீசுக்காரர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப் படும்" என்று போலீசு அதிகாரி கூறினார்.

நடக்க இருப்பவை

4-7-68

தேனி

நகர தி.மு.க. சார்பில் கல்வி — தொழிலமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்குப் பாராட்டு; மாலை 6 மணிக்கு மேற்குச் சந்தையில்; தலைவர்: பி. டி. ஆர். பழனிவேல்ராசன் எம்.எல்.ஏ.; பேசுவோர்: எஸ். முத்து எம்.எல்.சி.; கோ. இளங்கோவன், வே. இராமகிருட்டினன். (மாலை 4 மணிக்கு பொம்மைய கவுண்டம்பட்டியிலிருந்து அல்லி நகரம் வழியாக ஊர்வலம் வரும்).

கல்வி — தொழில் அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

ஜூலை 3 காலை 8-30 மணி: கண்டமானடி—உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத் திறப்பு; இரவு 10 மணி: விழுப்புரம்—அரசினர் கலைக் கல்லூரித் துவக்க விழாவில் கலந்துகொள்ளல்; பகல் 12-மணி: விழுப்புரம் நகராட்சி முன்னோடி குடிநீர்த் திட்டத் துவக்கம்; பிற்பகல் 12-45 மணி: ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடத் திறப்பு.

ஜூலை 4 காலை 9 மணி: சின்னமனூர்—கால்நடை மருந்தகம், விவசாயக் கிடங்குத் திறப்பு; 10-30 மணி: முத்தளாபுரம்—ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடத் திறப்பு; 11-15 மணி: காமாட்சிபுரம்—பள்ளிக் கட்டிடம், ஆசிரியைகள் விடுதிகள் திறப்பு; பிற்பகல் 4-மணி: உப்புப்பட்டி—மேல்நிலை குடிநீர்த் தொட்டி திறப்பு; மாலை 5-மணி: மாரியம்மன்கோயில் பட்டி—வீதி மின் விளக்குகள் துவக்கம்; 6-மணி: ஊஞ்சம் பட்டி—மேல்நிலை குடிநீர்த் தொட்டி திறப்பும், வீதி மின் விளக்குகள் துவக்கமும்; இரவு 7-மணி: தேனி—வானொலிக் கட்டிடத் திறப்பு; 7-30 மணி: தேனி பொதுக்கூட்டம்.

உணவு அமைச்சர்

கே. ஏ. மதியழகன்

நிகழ்ச்சிகள்

ஜூலை 3: காலை 9 மணி: சின்னையம் பட்டி ஊராட்சி அலுவலகக் கட்டிடத் திறப்பு; 10 மணி: தானிப்பாடி ஊராட்சி அலுவலகக் கட்டிடத் திறப்பு; 11 மணி: இராதாபுரம் ஊராட்சித் துவக்கப் பள்ளிக் கட்டிட அடிக்கல்நாட்டு விழா; 12 மணி: பழையனூர் ஊராட்சித் துவக்கப் பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா; மாலை 4 மணி: கீழப்பெண்ணாத்தூர் பள்ளிக் கட்டிடத் திறப்பு; 5 மணி: கருங்காலிபுரம் மேநிலை நீர்த்தொட்டி அடிக்கல் நாட்டு விழா; 7 மணி: திருவண்ணாமலை—பொதுக்கூட்டம்.

சிலப்பதிகார நாடகம்

திண்டுக்கல் வட்டம் முள்ளிபாடியில் செந்தமிழ் நாடக மன்றத்தினரால், 3-7-68 இரவு 9 மணிக்கு வி. எஸ். இலட்சுமணன் தலைமையில் திரு. மு. கருணாநிதி அவர்கள் தீட்டிய சிலப்பதிகார நாடகம் நடத்தப்பெறும்; மு. காதர்சா பேசுவார். 2-7-68

புதிய சேனை---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கும். குளங்களைப் பழுது பார்ப்பது—சாலைகளை மேலும் சீராக்குவது—தரிசு நிலங்களைச் சாகுபடிக்கு உகந்ததாய் மாற்றுவது—முதியோருக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது போன்ற அலுவல்களில் இவர்கள் ஓய்வு நேரத்தில் ஈடுபடுவார்கள். அந்தந்தத் துறைகளின் தொழில் நுட்ப ஊழியர்கள், சேரணியினருக்கு வழிகாட்டி உதவுவார்கள்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.